# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2015

**வணிகக் கல்வி I** | **இரண்டு மணித்தியாலம்**

கவனிக்கவும் :

* **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
* இலக்கம் 1 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வினாவிற்கு முன்னால் உள்ள புள்ளிக் கோட்டின் மேல் எழுதுக.
* இலக்கம் 31 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்குச் சுருக்க விடையினை உரிய புள்ளிக் கோட்டின் மேல் எழுதுக.
* எல்லாப் வினாக்களுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

---

**1.** மனிதத் தேவை விருப்பங்களுக்குரிய கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இதில் சரியான கூற்று எது?

(1) மனிதத் தேவைகள் கட்டாயமானது - விருப்பங்கள் கட்டாயமன்று
(2) தேவைகளுக்கு மாற்று வழிகள் உண்டு - விருப்பங்களுக்கு மாற்று வழிகள் இல்லை.
(3) தேவைகளைத் தோற்றுவிக்க முடியாது - விருப்பங்களைத் தோற்றுவிக்க முடியாது
(4) தேவைகள் அடிப்படையானது - விருப்பங்கள் அடிப்படையானது
(5) தேவைகள் பல்வகைப்பட்டதாகும் - விருப்பங்கள் பல்வகைப்பட்டதன்று (..............)

**2.** வணிகச் சூழல்வகைகளும் அதற்குரிய காரணிகளும் கீழே தரப்பட்டுள்ளன. அதிலுள்ள வேலைச் சூழலுக்குரியதை **மட்டும்** உள்ளடக்கிய காரணித்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) வாடிக்கையாளர்கள் / சமூகக் கலாச்சாரம்
(2) சமூகக் கலாசாரங்கள் / நிறுவனக் கட்டமைப்பு
(3) பல்வகை முதலீட்டாளர்கள் / வாடிக்கையாளர்கள்
(4) பல்வகை முதலீட்டாளர்கள் / நிறுவனக் கட்டமைப்பு
(5) நிறுவனக் கட்டமைப்பு / சமூகக் கலாச்சாரம் (..............)

the National e-learning Portal for The General Education

**3.** வணிகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொருப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அதிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு **மட்டும்** உரிய சமூகப் பொறுப்புக்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

(1) சமத்துவமானது / சுகாதார வசதிகள் / நியாயமானது
(2) இழப்புக்களைக் குறைத்தல் / சூழலை நேசிப்பவராக இருத்தல் / சமத்துவமானது
(3) உரிமைகளைப் பாதுகாத்தல் / தொழில் ரீதியான பாதுகாப்பு / இயற்கையை நேசிப்பவராக இருத்தல்
(4) நியாயமானது / இழப்புக்களைக் குறைத்தல் / உரிமைகளைப் பாதுகாத்தல்
(5) சுகாதார வசதிகள் / சமத்துவமானது / நியாயமானது (..............)

**4.** நியமக் குறியீடுகள் பல கீழே தரப்பட்டுள்ளன.




A B C D E

**நியமங்களின் பெயர்**

(1) கழிவுப் பொருள் பகுப்பாய்வும் இடர் கொண்ட இடங்களைக் கட்டுப்படுத்தலும்
(2) தரக்கட்டுப்பாட்டு முறையொன்றாகும்.
(3) சிறந்த சுகாதாரப் பாதுகாப்பு கொண்ட உற்பத்திப் படிமுறைகள்
(4) தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பு முகாமைத்துவம்
(5) சூழல் முகாமைத்துவ முறைமை.

மேலே குறிப்பிடப்பட்ட குறியீடுகளுக்குரிய நியமங்களின் பெயர்களை முறையே பொருத்தும் பொழுது சரியான விடையாகக் கிடைப்பது,

(1) A - 1 B - 2 C - 3 D - 4 E - 5
(2) A - 2 B - 1 C - 4 D - 3 E - 5
(3) A - 3 B - 4 C - 5 D - 2 E - 3
(4) A - 4 B - 5 C - 1 D - 3 E - 2
(5) A - 5 B - 3 C - 4 D - 3 E - 1 (........)

[பக். 2 ஐப் பார்க்க.

**5.** கீழே தரப்பட்டுள்ளவை நுகர்வாளர் உரிமைகளுக்குரிய கூற்றுக்களை வெளியிடப்பட்ட பிரிவினர்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வாளர் உரிமைகளுமாகும்.

| X | Y |
|---|---|
| A ஜோன் எப் கெனடி<br>B சர்வதேச நுகர்வோன் | 1. பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல்<br>2. சுகாதார நலன் கொண்ட சூழலில் வாழ்தல்<br>3. தகவல்களை அறிந்துகொள்ளல்<br>4. இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளல்<br>5. தெரிவு செய்தல்<br>6. நுகர்வோனுக்கான கல்வி<br>7. செவிமடுத்தல்<br>8. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல |

X, Y ஆகிய நிரல்களை இணைக்கும் பொழுது மிகவும் பொருத்தமான சரியான விடைத்தொகுதியாக இருப்பது

(1) A - 1, 2, 3, 4 B - 5, 6, 7, 8 (2) A - 2, 3, 4, 5 B - 1, 6, 7, 8
(3) A - 2, 6, 7, 8 B - 1, 3, 4, 5 (4) A - 1, 2, 4, 5 B - 3, 6, 7, 8
(5) A - 1, 3, 5, 7 B - 2, 4, 6, 8 (........)

**6.** அரசின் பொருளாதார நோக்கங்களுக்குரிய கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| பொருளாதார நோக்கம் | ප්‍රකාශ |
|---|---|
| A பூரண வேலைவாய்ப்பு மட்டம்<br>B பொருளாதார விருத்தி<br>C பொருளாதாரச் சுதந்திரம் | 1. பணவீக்கக் கட்டுப்பாடு<br>2. நியாயமான முறையில் வருமானம் பகிர்ந்து செல்லல்<br>3. நுகர்வோன், வணிகர், ஊழியர்கள் ஆகிய பிரிவினர்களுக்குரிய செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்தல்<br>4. நாட்டின் அனைத்து உற்பத்தி வளங்களும் விளைதிறன் கொண்டதாகப் பயன்படுத்துதல்<br>5. நாட்டின் உற்பத்தி இயல்ளவை உச்சளவில் தொடர்ந்து பேணிச் செல்லல் |

பொருளாதார நோக்கங்களுக்குப் பொருந்தக் கூடிய சரியான கூற்றாக இருப்பது

(1) A - 3 B - 5 C - 4 (2) A - 3 B - 4 C - 2 (3) A - 1 B - 2 C - 3
(4) A - 4 B - 5 C - 3 (5) A - 5 B - 3 C - 1 (........)

**7.** பல்வேறு வணிக அமைப்புக்களின் வகைகளில் சிலவற்றைக் கீழே காட்டப்பட்டுள்ளன.

A - தனியாள் உரிமை வணிகம்
B - பங்குடமை வணிகம்
C - வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி
D - வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

இலாபம் பெறும் நோக்கமாகக் காணப்பட்டாலும் தனியார் துறைக்குட்பட்டதாகவும் சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்து அற்றதுமான வணிக அமைப்பாக இருப்பது

(1) A, B (2) A, C (3) B, C (4) C, D (5) B, D (........)

**8.** பல வணிக அமைப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

A - பங்குடமை வணிகம் B - தொழில்சார் பங்குடமை வணிகம்
C - வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி D - கூட்டுறவுச் சங்கம்

இங்கு குறைந்த, கூடிய உரிமையாளர்களைச் சரியாகக் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்யவும்

(1) A - (2 - 10) B - (2 - 50) C - (2 - 10) D - ( 7- 50)
(2) A - (2 - 10) B - (2 - வரையறை அற்றது) C - (1 - 10) D - (10 - 50)
(3) A - (2 - 20) B - (2 - வரையறை அற்றது) C - (1 - 50) D - (10- வரையறை அற்றது)
(4) A - (2 - 50) B - (2 - 10) C - (2 - 50) D - (10 - 20)
(5) A - (2 - 20) B - (2 - வரையறை அற்றது) C - (2 - 50) D - (20 - வரையறை அற்றது)
(........)

**9.** பின்வரும் கூற்றுகளிலிருந்து முயற்சியாண்மை என்னும் எண்ணக்கரு தொடர்பாகப் பொருந்தக் கூடிய மிகக் கிட்டியதான விடையினைத் தெரிவு செய்யவும்.

(1) சமீர் மீன் பிடிப்பதற்காக மரபு ரீதியான நுட்ப முறைகளை நவீன மயப்படுத்துகின்றார்

(2) அமீர் மரபு ரீதியான ஔடதங்களுக்குப் பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்தி புதிய ஔடதங்களை உருவாக்குகின்றார்

(3) திலான் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெறுவற்காகத் தினந்தோறும் உடற்பயிற்சி செய்வதில் ஈடுபடுகின்றார்.

(4) சந்திரிக்கா பாராளுமனறத் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக மேம்படுத்தல் முறையொன்றாக இலவசமாகப் புத்தகங்களை விநியோகிக்கின்றார்.

(5) எட்வட் கிராமிய வைத்தியசாலையொன்றில் நீரிழிவு நோயாளிகளை இலக்காகக் கொண்டு புதிய ஔடத இலைக்கஞ்சி வியாபாரத்தில் ஈடுபடுகின்றார். (..............)

**10.** முயற்சியாண்மையை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய நாட்டினையும், அதிகமாக அவ்வெண்ணக்கருவைப் பயன்படுத்தும் நாடுகளையும் முறையாக உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்யவும்.

(1) இந்தியாவும், அபிவிருத்திய அடைந்த நாடுகளும்

(2) ஐக்கிய இராச்சியமும், அபிவிருத்திய அடைந்த நாடுகளும்

(3) பிரான்சும், அபிவிருத்திய அடைந்த நாடுகளும்

(4) பிரான்சும், அபிவிருத்திய அடைந்துவரும் நாடுகளும்

(5) பிலிப்பைன்சும், அபிவிருத்திய அடைந்த நாடுகளும் (..............)

**11.** சரியான கூற்றைத் தெரிவு செய்யவும்

(1) அனைத்துக் காசோலைகளுக்கும் செல்லுபடியாகும் காலம் ஆறு மாதங்களாகும்

(2) நடைமுறைக் கணக்கொன்றில் மட்டுமே காசோலை வைப்பிலிட முடியும்

(3) எல்லாக் காசோலைகளினதும் குறுக்குக்கோட்டினை கட்டளை இடுபவருக்கு மட்டுமே நீக்கச் செய்ய முடியும்.

(4) வங்கி மேலதிகப் பற்றுக்குக் கட்டாயமாகப் பிணை தேவைப்படுகின்றது.

(5) நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்குக் கட்டாயமாக முகாமையாளரின் அனுமதி தேவைப்படும். (..............)

**12.** பின்வரும் அட்டவணையில் காப்புறுதித் தத்துவங்களும், அவற்றின் பண்புகளும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A உச்ச நம்பிக்கை<br>B காப்புறுதி செய்யும் உரிமை<br>C இளப்பீட்டுத் தத்துவம்<br>D அண்மிய காரணம் | 1. சொத்தொன்றிருப்பது அனுகூலமாகவும் அச்சொத்து அற்றிருப்பது பிரதிகூலமானதாகவும் இருக்கும்.<br>2. காப்புறுத்துவோனும் காப்புறுதியைச் செய்வோனும் அனைத்துத் தகவல்களையும் ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்துதல் வேண்டும்.<br>3. காப்புறுதியானது சூதாட்டத்தினின்றும் வேறுபட்டது.<br>4. காப்பீட்டுக்குட்படுத்தாத இடர்களுக்கு இழப்பீடு கிடைக்காது |

X ஐயும் Y யையும் இணைக்கும் பொழுது சரியான விடையக இருப்பது

(1) A - 1 B - 2 C - 3 D - 4
(2) A - 2 B - 1 C - 3 D - 4
(3) A - 2 B - 3 C - 1 D - 4
(4) A - 3 B - 2 C - 4 D - 1
(5) A - 4 B - 3 C - 2 D - 1 (........)

**13.** இலங்கையில் அதிவேக நெடுஞ்சாலை வீதிகள் பரவலாக்கப்படும் போக்கைக் காணக்கூடியதாக உள்ளது.

A - தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வீதி

B - கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை வீதி

C - கொட்டாவ - கடுவலை வட்டப்பாதை அதிவேக வீதி

இவ்வீதிகளை அறிமுகப்படுத்தக் கூடிய குறியீட்டு எழுத்துக்களையும், அதன் இலக்கங்களையும் முறையாகக் காட்டும் தொகுதியாக இருப்பது

(1) A - (E - 01), B - (E - 02), C - (E - 03)
(2) A - (E - 01), B - (E - 03), C - (E - 02)
(3) A - (E - 02), B - (E - 01), C - (E - 03)
(4) A - (E - 02), B - (E - 03), C - (E - 01)
(5) A - (E - 03), B - (E - 01), C - (E - 02) (........)



The National e-learning Portal for The General Education

14.

| ஆவணங்கள் | வழங்கும் நிறுவனங்கள் |
|---|---|
| A வாகனத் தகுதிச் சான்றிதழ் | 1. பிரதேச செயலாளர் காரியாலயம் |
| B வருமான வரி அனுமதிப்பத்திரம் | 2. மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம் |
| C சாரதி அனுமதிப் பத்திரம் | 3. அரசு அங்கீகாரமளிக்கப்பட்ட வேலைத் தளம் |
| D வீசா அனுமதிப் பத்திரம் | 4. தூதுவர் காரியாலயம் |
| E வார்நாமம் | 5. கப்பல் கம்பனி |

மேற்கூறிய அட்டவணையில் ஆவனங்களும், அவ்வாவனங்களை வழங்கும் நிறுவனங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றைச் சரியாகப் பொருத்தும் போது கிடைக்கும் விடைத் தொகுதியாக இருப்பது

(1) A - 1 B - 4 C - 3 D - 2 E - 3
(2) A - 2 B - 1 C - 3 D - 5 E - 2
(3) A - 3 B - 1 C - 2 D - 4 E - 5
(4) A - 4 B - 2 C - 1 D - 3 E - 5
(5) A - 5 B - 3 C - 4 D - 2 E - 1 (........)

15. பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றது.

A - ஐரோப்பிய நாடுகளில் அதிகமான நாடுகள் ஒன்றிணைந்து ஏற்படுத்தி இருக்கின்ற வர்த்தக, பொருளாதார, சமூக விருத்திக்காக உருவாக்கப்பட்டிருக்கும் அமைப்பொன்றாகும்.

B - இலங்கை, இந்தியா உட்பட எட்டு ஆசிய நாடுகள் ஒன்றிணைந்து பொருளாதார ஒத்துழைப்புக்காக உருவாக்கப்பட்ட அமைப்பொன்றாகும்.

C - சர்வதேச சுதந்திர வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பொன்றாகும்.

D - வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

மேற்காட்டிய தகவல்களுக்குரிய அமைப்புக்களை ஒழுங்குமுறையாகக் காட்டும் தொகுதியாக இருப்பது

(1) NAFTA / SAARC / GSP+ / EU ஆகும்.
(2) G-8 / ASIAN / WTO / NAFTA ஆகும்.
(3) EU / SAARC / GSP+ / NAFTAஆகும்.
(4) GSP+ / SAARC / EU / WTO ஆகும்.
(5) EU / SAARC / NAFTA / GSP + ஆகும். (........)

16. முகாமையாளர்களை வகைப்படுத்தப்படும் அடிப்படைகளும், உதாரணங்களும் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| A முகாமையாளர் மட்டத்திற்கமைய | 1. மனித வள முகாமையாளர் |
| B செயற்பாடுகளில் விடயத்துறைக்கு அமைய | 2. நடுத்தர / மத்திய முகாமையாளர் |
| C பணிகளின் பொறுப்புக்களுக்கமைய | 3. முதல் வரிசை முகாமையாளர் |

X ஐயும் Y யையும சரியாகப் பொருத்தும் பொழுது சரியன விடைத்தொகுதியாக இருப்பது

(1) A - 1 B - 2 C - 3
(2) A - 1 B - 3 C - 2
(3) A - 2 B - 1 C - 3
(4) A - 3 B - 1 C - 2
(5) A - 3 B - 2 C - 1 (........)

17. ரவி இலங்கை கல்வி நிருவாக சேவையின் அதிபராவர். அவருக்குரிய பதவியினடிப்படையில் கிடைக்கும் அதிகாரத்தை அழைப்பது

(1) சட்டரீதியான அதிகாரமாகும்
(2) தொடராகக் கிடைக்கும்அதிகாரமாகும்
(3) விசேடத்துவமான அதிகாரமாகும்
(4) நிர்வாக ரீதியான அதிகாரமாகும்
(5) ஆளுமை ரீதியான அதிகாரமாகும். (........)

18.

| X | Y |
|---|---|
| A தேசியக் குறியீடு | 1. ஒரே குறியீட்டின் கீழ் பொருற் தொகுதியொன்றை முன்வைத்தல் |
| B தனிப்பட்ட குறியீடு | 2. ஒரே நிறுவனத்தின் உற்பத்திப் பொருளுக்காக வெவ்வேறாகக் குறியீடுகளைப் பயன்படுத்தல் |
| C குடும்பக் குறியீடு | 3. உற்பத்தியாளரினால் உற்பத்திப் பொருளட்களை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யததன் பின்னர் வியாபாரிகளினால் அவ்வுற்பத்திக்குப் பயன்படுத்தும் குறியீடு |
| D பண்டக் குறியீடு | 4. சந்தைக்குச் சுயமான குறியீடு பயன்படுத்தப்படும். |

X நிரலில் குறியீட்டு வகைகளும Y நிரலில் அவற்றின் சுருக்கமான விளக்கமும் காட்டக்கூடியவாறு சரியாகப் பொருத்தும் பொழுது கிடைக்கும் விடையாக இருப்பது.

(1) A - 1 B - 2 C - 3 D - 4
(2) A - 2 B - 4 C - 1 D - 3
(3) A - 3 B - 1 C - 4 D - 2
(4) A - 4 B - 3 C - 1 D - 2
(5) A - 4 B - 3 C - 2 D - 1 (........)

[பக். 5 ஐப் பார்க்க.

The National e-learning Portal for The General Education

**19.** நுகர்வோன் மீது கூடிய கவனம் செலுத்தப்படும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவானது
(1) உற்பத்தி எண்ணக்கருவாகும் (2) உற்பத்திப் பொருள் எண்ணக்கருவாகும்
(3) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகும் (4) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகும்
(5) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகும் (........)

**20.** உள்நாட்டுப் பண வடிவில் அரசிற்குத் தேவையான மத்திய கால நீண்டகாலக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக அரசின் சார்பாக இலங்கை மத்திய வங்கியினால் அரச கடன் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் அங்கீகாரத் தூய பிணைப் பத்திரத்தின் விஷேட வகையானது
(1) இலங்கை அபிவிருத்திப் பிணைப்பத்திரமாகும்.
(2) திறைசேறி முறிகளாகும்.
(3) ரூபாய்க் கடன் பிணைப்பத்திரங்களாகும்.
(4) தொகுதிக் கடன் பத்திரமாகும்.
(5) அலகுப் பொருப்பு.
(........)

**21.** திறைசேறி உண்டியல்களை வழங்குவதற்கு அனுமதியைப் பெற வேண்டியது,
(1) சனாதிபதியிடமிருந்தாகும் (2) நிதியமைச்சரிடமிந்தாகும்.
(3) மத்திய வங்கி ஆளுநரிடமிருந்தாகும் (4) திறைசேறிச் செயலாளரிடமிருந்தாகும்.
(5) பாராளுமன்றத்திடமிருந்தகும் (........)

**22.** கீழே தரப்பட்டுள்ள முகாமைத்துவப் பயிற்சியும் அபிவிருத்தியும் வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய பண்புகளாகும்.
A - எண்ணக்கரு ரீதியான திறன்களைப் பெற்றுக்கொள்ளுதலாகும்
B - பொதுவாக நீண்ட காலம் கொண்டது
C - தொழில் நுட்பத் திறன்களைப் பெற்றுக்கொடுக்கும்
D - பொதுவாகக் குறுங்காலம் கொண்டது
E - முகாமைத்துவப் பணிப்பாளர்களை இலக்காகக் கொண்டது
F - தொடர்ச்சியாக நடத்திச் செல்ல வேண்டும்.
G - நிறுவனத்தின் எதிர்காலத் தேவைகளுக்குரியது.
இவற்றுள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களது பண்பாக இருப்பது
(1) A, B, E, G (2) A, C, D, G (3) A, C, E, F (4) A, D, F, G (5) A, F, D, C (........)

The National e-Learning Portal for The General Education

**23.** நளீன் வணிகத்தின் 2014.12.31 ஆம் திகதியிலன்றுள்ளவாறான நிதிநிலமைத் தகவல்கள் பின்வருமாறு

| | ரூபா. |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 25 000 |
| கடன்பட்டோர் | 30 000 |
| முற்பணக் காப்புறுதி | 10 000 |
| காசு மீதி | 5 000 |
| முற்பணமாகப் பெற்ற கட்டட வாடகை | 6 000 |
| கடன் கொடுத்தோர் | 22 000 |
| அட்டுறு மின் கட்டணம் | 5 000 |

மொத்தத் தொழிற்படு மூலதனத்தையும், தேறிய தொழிற்படு மூலதனத்தையும் உள்ளடக்கிய விடையாக இருப்பது
(1) ரூபா 70 000 மும் 37 000 மூமாகும் (2) ரூபா70 000 மும் 33 000 மூமாகும்
(3) ரூபா 33 000 மும் 70 000 மூமாகும் (4) ரூபா37 000 மும் 70 000 மூமாகும்
(5) ரூபா 76 000 மும் 49 000 மூமாகும் (........)

**24.** செல்வம், காதர். வில்லியம் ஆகியோர் அரச நிர்வாக சேவையில் ஈடுபடும் அதிகாரிகள் மூவராவர்

| பெயர் | சேவைக் காலம் தரம் **II** இல் | மொத்த சேவைக்காலம் வருடம் |
|---|---|---|
| செல்வம் | 05 | 20 |
| காதர் | 07 | 10 |
| வில்லியம் | 06 | 25 |

[பக். 6 ஐப் பார்க்க.

இம்மூவரில் ஒருவரைத் தரம் 1 இற்குப் பதவி உயர்த்தப்பட வேண்டி உள்ளது. மிகவும் பொருத்தமான நபருக்குரிய கூற்றாக இருப்பது

(1) மொத்த சேவைக்காலம் செல்வத்தை விட வில்லியமின் சேவைக்காலம் கூடுதலாக இருப்பதனால் வில்லியம் பொருத்தமானவர்
(2) தரம் II இன் சேவைக்காலம் அதிகமாக இருப்பதால் காதர் தகைமை கொண்டவர்
(3) சிரேஷ்டமுடையவராக இருப்பதால் செல்வம் தகைமை உடையவர்
(4) மொத்த சேவைக்காலம் 25 வருடங்களைப் பூர்த்தி செய்யப்பட்டு இளைப்பாறிச் செல்வத்திற்கு அண்மித்திருப்பதனால் வில்லியம் தகைமை பெற்றவர்
(5) II ஆம் தரத்தில் குறைவான சேவைக்காலமாக இருப்பதனால் செல்வம் தகைமை கொண்டவர்

(........)

**25.** வணிக வங்கியொன்றில் வைப்புக்களை ஏற்றல், பணக் கொடுப்பனவுகள், அடகுச் சேவைகள், காசோலை மறுப்பறிவிப்பு, கடன் வழங்கல் என்றவாறு அனேக பணிகள் உள்ளன. இவற்றை நிறைவேற்றுவதற்காக வெவ்வேறான பதவிகள் ஏற்படுத்துவதை அறிமுகப்படுத்தலைக் குறிப்பது.

(1) தொழில் பகுப்பாய்வு எனவாகும்
(2) தொழில் உருவாக்கம் எனவாகும்
(3) செயல் திறனை அளவிடல் எனவாகும்
(4) தொழில் விபரம் எனவாகும்
(5) வேலை அமைப்பு முறை எனவாகும்.

(........)

**26.** வெளியக பணியாளர்களை ஈர்ப்பினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலமாக இருப்பது

(1) நிறுவனத்துக்குப் பற்றுள்ள விண்ணப்பதாரர் பிரிவினர்களை ஈர்ப்பதற்கான இயலுமையாகும்.
(2) புதிய அறிவுடனும் இற்றைப்படுத்தக் கூடியதுமான பணியாளர் பிரிவினரைச் சேர்த்துக் கொள்ள இயலுமாக இருத்தலாகும்
(3) உள்ளக ஊழியர் பிரச்சினை ஏற்படாதிருத்தலாகும்
(4) கிரயம் குறைவாக இருத்தலாகும்
(5) உள்ளகப் பணியாளர்கள் கூடிய விருப்பம் கொண்டவர்களாக இருத்தலுமாகும்

(........)

**27.** தரவு தயாரித்தல் செயன்முறைகளின் செயற்பாடுகளுக்குரிய சரியான விடையாக இருப்பது

(1) வகைப்படுத்தல் / தெரிவு செய்தல் / இலத்திரனியல் தரவுகளை தயாரித்தல் / இலத்திரனியல் இயந்திரம்
(2) வகைப்படுத்தல் / பொழிப்பாக்கல் / கணிப்பிடுதல் / இலத்திரனியல் தரவுகளை தயாரித்தல்
(3) தெரிவு செய்தல் / கணிப்பிடுதல்/ பொழிப்பாக்கல் / இலத்திரனியல் இயந்திரம்
(4) வகைப்படுத்தல் / தெரிவு செய்தல் / கணிப்பிடுதல் / பொழிப்பாக்கல்
(5) வகைப்படுத்தல் / பொழிப்பாக்கல் / இலத்திரனியல் தரவுகளைத் தயாரித்தல் / இலத்திரனியல் இயந்திரம்

(........)

**28.** உற்பத்தி நிறுவனமொன்றின் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

நுகரப்படும் அலகுகளின் எண்ணிக்கை 180
அலகொன்றின் கட்டளைக் கிரயம் ரூ. 100/-
அலகொன்றிற்கான பராமரிப்புக் கியரம் ரூ. 10/-
அலகொன்றிற்கான கொள்வனவு விலை ரூ. 180/-
மறு கட்டளைத் தொகையாக இருப்பது

(1) 18 ஆகும் (2) 60 ஆகும் (3) 180 ஆகும் (4) 600 ஆகும் (5) 1800 ஆகும்

(........)

**29.** முகாமைத்துவ மட்டத்தின் போது முதலீட்டு மதிப்பீடும், பொருளாதாரக் கட்டளைக் கணியப் பெறுமானங்களையும் கணிப்பிடுதல் போன்ற தீர்மானங்களை எடுப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய தகவல் முறைமையாக இருப்பது

(1) அறிவுச் செயற்பாட்டு முறைமையாகும்
(2) முகாமைத்துவத் தகவல் முறைமையாகும்
(3) தீர்மான உதவி முறைமையாகும்
(4) கொடுக்கல் வாங்கல் தயாரிப்பு முறைமையாகும்
(5) நிறைவேற்று உதவி முறைமையாகும்.

(........)

**30.** நிதி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடங்கும் விடயங்கள் பல கீழே காணப்படுகின்றன.

A - ஊழியர் தேவைப்பாடு
B - இலக்குச் சந்தை
C - போட்டியாளர் பகுப்பாய்வு
D - தொழிற்சாலை தள அமைப்பு முறை
E - உத்தேச விற்பனை

மேற்காட்டிய விடயங்களிலிருந்து சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் தகவல்களை உள்ளடக்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A B C (2) A C D (3) B C D (4) B C E (5) C D E

(........)

[பக். 7 ஐப் பார்க்க.

- வினா இலக்கம் **31** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது பொருத்தமான பதங்களைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்பவும்

**31.** (அ) வணிகமொன்றின் புறச் சூழலுடன் இணைந்ததாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் தொகுதியொன்றாக ............ .................................. காணப்படுகின்றது.

(ஆ) அமைப்பு அகவிதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பங்குரிமையாளர்களின் சொந்தச் சொத்துக்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் கம்பனியை ........................................................ எனும் பெயர் கொண்டழைக்கப்படும்.

**32.** (அ) நிதிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தை ..................................................................... எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

(ஆ) கொடுப்பனவு செய்வதற்காக வங்கிக்குச் சமர்பிக்கப்பட்ட காசோலைக்குப் பணம் செலுத்துவதை மறுப்பது ........................................................................... எனும் பெயர் கொண்டழைக்கப்படும்.

**33.** (அ) காப்புறுதியில் பண ரீதியாக மதிப்பிடக் கூடிய இழப்பீடொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் ........................ ........................................... எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுவதுடன் அவ்வாறு ஏற்படுவதற்குள்ள சந்தர்ப்பத்தை ........................................................... எனவும் அழைக்கப்படும்.

(ஆ) வணிக வங்கிகளினால் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி நவீன தொழினுட்பக் கருவியொன்றான டெலர் (ATM) இயந்திரத்தைப் பொருத்தும் பொழுது ........................................................ இன் மூலம் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**34.** (அ) உற்பத்தியாளரொருவரின் பொருட்களை நாடு முழுவதும் விநியோகிப்பதற்காக கிளைகள் நடத்திச் செல்லும் விற்பனையகங்களை ................................................................ என அழைக்கப்டும்.

(ஆ) நாடொன்று எவ்விதத் தடையுமின்றிப் பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்குச் சந்தரப்பமொன்று இருப்பதை ............................................................................................ எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

**35.** (அ) சர்வதேச தொழிலாளர் அமைப்பும் (ILO) இலங்கைத் தர நியம நிறுவனமும் ஒன்றினைந்து அறிமுகப்படுத்தியுள்ள நியமத்தை ...................................................................................... என்று அழைக்கப்படும்.

(ஆ) விஞ்ஞான ரீதியான முகாமைத்துவத்தின் தந்தை எனக் கருதப்படுவது ...............................................ஆவர்.

**36.** (அ) வியாபாரக் குறியொன்றைப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பொதுமக்களுக்கு அறிவித்தல் கொடுப்பது ...............................................மூலமாகும்.

(ஆ) நிறுவனமொன்றின் தீர்மானம் எடுப்பதில் கூடிய அதிகாரம் மேல் மட்ட முகாமையாளரிடம் காணப்படுமாயின் அதனை ................................................................. எனவும் தீர்மானமெடுப்பதில் கூடிய அதிகாரம் கீழ்மட்ட முகாமையாளர் வரை ஒப்படைக்கப்பட்டிருப்பின் அதனை ........................................... .................. எனவும் அழைக்கப்படும்.

**37.** (அ) தொடர்பாடல் முறையொன்றை மிகவும் விளைத்திறன் கொண்டதாக நடத்திச் செல்வதற்கு இருக்க வேண்டிய **இரு** பண்புகளைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(ஆ) வணிக நிறுவனமொன்றினால் பயன்படுத்தப்படும் ஏனைய தொடர்பாடல் முறைகளோடு ஒப்பிடும்போது எழுத்து மூலத் தொடர்பாடல் முறையொன்றில் காணப்படும் **இரு** அனுகூலங்களைக் குறிப்பிடவும்.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

**38.** (அ) வணிகமொன்றின் நிதி முகாத்தைதுவத்தின் பிரதானமான தீர்மானங்கள் **இரண்டாவன**

(1) ................................................................... மும் (2) ..................................................................... முமாகும்

(ஆ) நிதித் தேவைப்பாட்டை வகைப்படுத்தக் கூடிய பிரதானமான அடிப்படைத் தீர்மானங்கள் **இரண்டாவன**

(1) ................................................................... மும் (2) ..................................................................... முமாகும்

[பக். 8 ஐப் பார்க்க.

**39.** (அ) கீழ் காட்டப்பட்ட வணிகத் துறைகளுக்குரிய கட்டுப்பாட்டுக் கருவிகளை முன்னால் குறித்துக் காட்டுங்கள்

நிதித் துறை ........................................................ செயற்பாட்டுத் துறை ........................................................

(ஆ) நகர்ப் பிரதேச அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் கணினி வலையமைப்பை ........ ..................................... எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

**40.** (அ) தனிப்பட்டவரின் அல்லது அமைப்பொன்றின் தேவையொன்றை அல்லது விருப்பமொன்றை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய உற்பத்திப் பொருளொன்று தொடர்பாக முயற்சியாளரொருவரிடம் காணப்படும் உள ரீதியான எண்ணங்களை ............................................................. என்றழைக்கப்படும்.

(ஆ) அக்கரை செலுத்தும் பிரிவினருக்கு முன்வைப்பதற்காக வணிகத் திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் அடிப்படை அம்சங்களைப் பொழிப்பாக்கிக் காட்டப்படும் பகுதியை ................................................................ எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

● வினா இலக்கம் **1** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்குச் சரியான விடையை எழுதுங்கள்

**41.** (அ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கருமங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுங்கள்

(1) ....................................................................................................................................

(2) ....................................................................................................................................

(ஆ அங்கீகார வணிக வகைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுங்கள்

(1) ....................................................................................................................................

(2) ....................................................................................................................................

**42.** (அ) தனது தனிப்பட்ட சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் சட்டரீதியான தனிமனித அந்தஸ்தும், நீண்டகால நிலைப்புத் தன்மையையும் கொண்ட ஒரு நபரினால் ஆரம்பிக்கக் கூடிய வணிக அமைப்பு வகை எது? ....................................................................................................................................

(ஆ) வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அமைப்பு அகவிதிப் பத்திரத்திற்கு ஒத்ததாக கூட்டுறவுச் சங்கமொன்றும் பதிவு செய்வதற்கு முன்வைக்கப்பட வேண்டிய ஆவணம் எது?

....................................................................................................................................

**43.** (அ) தொடர்ச்சியான கட்டளைகள் இரண்டுக்கிடையிலான காலம் .............................................. ஆக இருப்பதுடன் பொருட்கள் களஞ்சியத்திற்கு கட்டளையிடுவது தொட்டு அவை கிடைக்கும் வரையிலுள்ள காலத்திற்குரிய அலகுகளின் எண்ணிக்கை ......... ஆகும்.

(ஆ) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் **நான்கு** பிரிவுகளைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள்

(1) ....................................................................................................................................

(2) ....................................................................................................................................

(3) ....................................................................................................................................

(4) ....................................................................................................................................

**44.** (அ) ஒவ்வொரு நுகர்வோனினதும் தேவைகளைத் திருப்திப் படுத்துவதில் கவனம் செலுத்தப்படும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாக இருப்பது ........................................................................................ ஆகும்.

(ஆ) சந்தைத் துண்டாக்கம் செய்யும் போது விற்பனையாளர்கள் கூடுதலாக சமூக விஞ்ஞானக் காரணிகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் தாக்கத்தைக் குறிப்பிடுவது

....................................................................................................................................

**45.** (அ) நிதி முகாமைத்துவத் தீர்மானங்களுக்கமைய குறுங்கால முதலீட்டுத் தீர்மானங்கள் **இரண்டு** தருக.

(1) ....................................................................................................................................

(2) ....................................................................................................................................

(ஆ) நீண்டகால நிதித் தீர்மானங்கள் இரண்டு தருக.

(1) ....................................................................................................................................

(2) ....................................................................................................................................

[பக். 9 ஐப் பார்க்க.

**46.** (அ) பங்குச் சந்தையில் பங்குகளின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்லும் போக்குக் காணப்படுவதாயின் அதனை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்.

..........................................................................................................

(ஆ) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்று தொகுதிக் கடன் பத்திரங்களைக் வழங்குவதை விட சாதாரண பங்குகளை வழங்கி நிதியத்தை உருவாக்கிக் கொள்வதில் கவனம் செலுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய **இரு** காரணிகளைக் குறிப்பிடுங்கள்

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**47.** (அ) காசு வரவுத் திட்டமொன்றைத் தயாரிப்பதனால் கிடைக்கும் பயன்கள் **இரண்டைக்** குறிப்பிடவும்

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(ஆ) வணிகமொன்றின் நிதிக்கூற்றுப் பகுப்பாய்வின் மூலம் தயாரிக்கக் கூடிய நிதி விகித வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுங்கள்

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**48.** (அ) மனித வள முகாமைத்துவத்தின் பொது நோக்கம் என்ன?

..........................................................................................................

..........................................................................................................

(ஆ) பணியாளரொருவருக்குச் சம்பளத்தைத் தீர்மானிக்கும் பொழுது கருத்திற் கொள்ளப்படவேண்டிய காரணிகள் எவை?

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

The National e-learning Portal for The General Education

**49.** (அ) வணிக நிதி முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கமாக இருப்பது..........................................ஆகும்.

(ஆ) நிதிச் சந்தைக் கருவிகளின் முதிர்வடையும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தக் கூடிய **இரு** முறைகளைப் பெயரிட்டுக் காட்டுங்கள்

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**50.** (அ) நிறுவனமொன்றில் பயன்படுத்தக் கூடிய மட்டங்களுக்கமைய தகவல் முறைமையைப் பெயரிட்டுக் காட்டவும்.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

(ஆ) வணிகத் திட்டமொன்றின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கும் பிரிவுகள் **நான்கினைக்** குறிப்பிடுங்கள்

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

***

# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2015

| வணிகக் கல்வி II | மூன்று மணித்தியாலம் |
| --- | --- |

**கவனிக்கவும் :**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது **இரு** வினாக்கள் வீதம் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்க.

## பகுதி I

**1.** நிகழ்காலத்தில் வணிக நடவடிக்கைகளின் நோக்கங்களாக இருப்பது இலபாம், சமூக நலன்கள் மட்டுமன்றி ஏனைய நோக்கங்களையும் கொண்டதாக இருக்கும்.

(i) (அ) அவ்வாறு காணப்படும் ஏனைய **நான்கு** நோக்கங்களைப் பெயரிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(ஆ) அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வணிகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் **நான்கு** கருமங்களைக் குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(ii) (அ) முதலாம் நிலை உற்பத்திக்கும், இரண்டாம் நிலை உற்பத்திக்கும் இடையே காணப்படும் தொடர்பினை உதாரணங்கள் மூலம் விளக்கவும். (02 புள்ளிகள்)

(ஆ) மனிதத் தேவைகள் பொதுவானது. விருப்பங்களானவை பல்வேறுபட்டனவாகும்". இவ்வாறு மனித விருப்பங்கள் பல்வேறுபட்ட வகைகளாக இருப்பதற்கான காரணங்கள் **நான்கினைப்** பெயரிட்டுக் காட்டுங்கள். (02 புள்ளிகள்)

(iii) (அ) உற்பத்தி, உற்பத்திப் பொருட்கள் (Production and Product) ஆகிய உள்ளீடுகளை விளக்கவும். (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியும் நுகர்வும் ஒரே முறையில் இடம்பெறும் உற்பத்தி வணிகங்களை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்? இதன் பிரதான **இரு** பிரிவுகளைக் குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(iv) வணிக அமைப்பொன்றின் புறச் சூழலின் பிரதான காரணிகளான பொருளாதாரச் சூழற் காரணிகளின் மாறல்களினால் நிதிச் சேவையினை வழங்கும் வணிக அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினைச் சுருக்கமாக விளக்கவும். (04 புள்ளிகள்)

(v) (அ) தரமான பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றை நடத்துவதற்கு நீங்கள் எண்ணி இருப்பின் ஊழியர்களினால் மேம்படுத்திக் கொள்ள வேண்டிய பண்புகள் எவை? (02 புள்ளிகள்)

(அ) பூகோளமயமாதலின் மூலம் வணிக நடவடிக்கைகளுக்கு சாதகமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறைகள் **நான்கினைக்** குறிப்பிட்டுக் காட்டுங்கள் (02 புள்ளிகள்)

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**2.** (i) (அ) ஜப்பானைச் சேர்ந்த வணிகர் ஒருவர் இலங்கையில் மோட்டார் வாகனங்களைப் பொருத்தும் தொழிற்சாலையொன்றை கண்டி நகரில் ஆரம்பிப்பதற்கு எண்ணி உள்ளார். இதற்காக அனுமதி அளிக்கக் கூடிய சட்டரீதியான அதிகாரம் பெற்ற நிறுவனத்தின பெயரைக் குறிப்பிடுக. எக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வனுமதி வழங்கப்படுகின்றது? (02 புள்ளிகள்)

(ஆ) "ஒரு நாட்டின் பொருளாதார நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அரசிற்கும் வணிகங்களுக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்பட வேண்டும்" விளக்கவும். (02 புள்ளிகள்)

(ii) (அ) "நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபையானது எவ்வேளையிலும் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கல் மேற்கொள்ளப்படும்." நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான தேவைப்பாடானது நிகழ்காலத்தில் முக்கியமானதாக இருப்பதற்கான காரணங்கள் **நான்கினைப்** பெயரிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வோர் பொருப்புக்கள் **நான்கினைக்** குறிப்பிடவும். (02 புள்ளிகள்)

(iii) (அ) "சினேகா", க.பொ.த. (சா.த)த்திலும் க.பொ.த. (உ.தர)த்திலும் சித்தியடைந்ததன் பின்னர் உயர்தரக் கல்விக்காக வெளிநாட்டிற்குச் செல்வதற்கு எண்ணியுள்ளாள். இச்செயற்பாட்டிற்கு நேரடியாகத் தொடர்புபடும் அரச நிருவனங்கள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடவும். (02 புள்ளிகள்)

(ஆ) தனியாள் உரிமை வணிகமொன்றை எச்சந்தர்ப்பத்தில் பதிவு செய்தல் வேண்டும்? பதிவு செய்யும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளைக் குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

[ பக் 2 ஐப் பார்க்க

(iv) (அ) சிவராம் எவ்வேளையிலும் மற்றோர்களுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாக நம்பிக்கை கொள்ளாதவராக இருப்பதுடன் சுயாதீனமான வகையில் நடவடிக்கை மேற்கொள்வதில் விருப்பமுடையவர். குமார் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு மற்றோர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கும் விருப்பம் கொண்டவர். சிவராமும் குமாரும் ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வணிக அமைப்பு வகைகளை வெவ்வேறாகக் குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(ஆ) "அனைத்து வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளும் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளாகும்" இக்கருத்திற்கு நீங்கள் உடன்படுகின்றீரா? விளக்கவும். (02 புள்ளிகள்)

(v) (அ) கூட்டுறவு வியாபார நிலையங்களுக்கு அரச அனுசரணை கிடைக்கப்பெற்றாலும் தனியார் வியாபார நிலையங்களுடன் போட்டியிடும் பொழுது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். அப்பிரச்சினைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(அ) அங்கீகாரம் பெற்ற ஒருவரைத் தெரிவு செய்யும் பொழுது அங்கீகாரமளிப்பவர் கருத்திற்கொள்ளப்படும் காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**3.** (i) (அ) பின்வரும் தகவல்களின் துணை கொண்டு கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்.

- இசுரு தனது தந்தை வழியில் உரிமை பெற்ற மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் வணிகத்தை நவீனமயப்படுத்தி நடாத்திச் செல்கின்றார்.
- ரவீந்திரன் டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காக உள்நாட்டு ஔடதங்களைப் பயன்படுத்தி நெழும்புச் சுருளொன்றை அறிமுகப்படுத்தி உள்ளார்.
- காயத்திரி பழைய பாடல்களுக்கு இசைகளைக் கலந்து பாடல்களடங்கிய இருவட்டினை அறிமுகப்படுத்தியுள்ளாள்.

1. இம்மூவரில் வெற்றிகரமான முயற்சியாளராகக் கருதப்படுபவர் யார்? (1/2 புள்ளி)
2. நீங்கள் முன்வைக்கும் முயற்சியாளரிடம் இருக்க வேண்டிய பண்புகள் **மூன்றைக்** குறிப்பிட்டுக் காட்டவும். (1 1/2 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் சிற்றளவு கொண்ட முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிட்டு அந்நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகள் **ஒவ்வொன்று வீதம்** குறிப்பிட்டுக் காட்டுங்கள். (02 புள்ளிகள்)

(ii) (அ) நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு கடன் தரப்படுத்தல் நிறுவனமானது எவ்வாறு தொடர்புபடுகின்றது. (02 புள்ளிகள்)

(ஆ) நிதி நிறுவனமொன்றின் மூலம் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றில் பின்வரும் குறியீடுகளைக் காணக்கூடியதாக இருந்தது.

**BB + (1ka) Fitch Rating**

மேற்காட்டிய குறியீடுகள் மூலம் என்ன கூறப்பட்டுள்ளது? (01 புள்ளி)

கடன் தரப்படுத்தல் நடவடிக்கைகளினூடாக வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் பயன்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டுக் காட்டுங்கள். (01 புள்ளி)

(iii) (அ) காசோலையின் அடியிதல் மூலம் கணக்குரிமையாளருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் யாது? (02 புள்ளிகள்)

(ஆ) 1. "காசுக் காசோலை" என்பது யாது? (01 புள்ளி)

2. "காசுக் காசோலையில் குறுக்குக் கோடிட முடியாது" இக்கூற்றுக்கு நீங்கள் உடன்படுகிறீரா? விளக்கவும் (01 புள்ளி)

(iv) (அ) ஒப்பந்தச் சேமிப்பு நிருவனம் என்பது யாது? உதாரணம் மூலம் விளக்கவும். (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை மத்தியவங்கியானது அண்மையில் ரூபா. **5000** பெறுமதியான நாணயத்தாள்களை அறிமுகப்படுத்தி உள்ளது. அவ்வாறான உயர் பெறுமானம் கொண்ட பணத் தாள்களை அறிமுகப்படுத்திக் கொடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்திய **இரண்டு** காரணங்களைக் குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(v) (அ) நிகழ்காலத்தில் இலத்தினியல் பணத்தைப் பயன்படுத்துவதில் கூடிய வளர்ச்சிப் போக்கைக் காணக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் கொடுப்பனவு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் **இரண்டு** வசதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

[ பக் 3 ஐப் பார்க்க

(ஆ) சூரன் ரூபா. **500 000/-** பெறுமதியான திடீர் விபத்துக் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டது, ஒரு வருடத்தின் பின்னர் அவர் தீடீரென ஏற்பட்ட இருதய நோயின் காரணமாக இறந்து விட்டார். அவரது உரிமையாளர் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையினைத் தருமாறு கோரிக்கை விடப்பட்டாலும் காப்புறுதிக் கம்பனியினால் அக்கோரிக்கையை நிராகரிக்கப்பட்டு விட்டது.
காப்புறுதி கம்பனியால் அவ்வாறு கொடுப்பனவை இரத்துச் செய்ய முடியுமா? முடியாதா? என்பதனை விளக்கவும். (02 புள்ளிகள்)

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**4.** (i) (அ) சாலினி, மாலினி ஆகிய இருவரும் ஒத்த வயதினையுடைய பட்டதாரி ஆசிரியைகளாவர். மாதாந்தச் சம்பளத்திலிருந்து குறைக்கப்படும் எனும் உடன்படிக்கைக்கு அமைய ஒரே காப்புறுதிக் கம்பனியிலிருந்து இரு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்கள் பெறப்பட்டன. அவர்கள் இருவரினதும் சம்பளத்திலிருந்து குறைக்கப்படும் தவணைக்கட்டணங்களில் வேறுபாடு காணப்படுகின்றது. இவ்வாறு வேறுபடுவதில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய முக்கிய காரணங்கள் எவை எனக் கூறுக. (02 புள்ளிகள்)

(ஆ) அண்மைக் காலத்தில் இலங்கையின் வீதி அமைப்பு முறையினை நவீனமயப்படுத்துவதற்காக பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் முழுமையான போக்குவரத்து முறைமையின் வளர்ச்சியை எதிர்பார்க்க முடியுமா? விளக்கவும். (02 புள்ளிகள்)

(ii) விவசாயிகள் தனது காய்கறி, பழவகைகளை பண்ணைகளிலிருந்து விஷேட பொருளாதார மத்திய நிலையத்திற்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதும், அவற்றை மொத்த வியாபாரிகளினால் நாடு முழுவதும் விநியோகம் செய்தலும் இடம்பெறும்.

(அ) காய்கறிகளையும், பழவகைகளையும் பாதுகாப்பாக விநியோகிக்கும் பொழுது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடவும். (02 புள்ளிகள்)

(ஆ) விசேட பொருளாதார மத்திய நிலையங்களினால் காய்கறி பழவகைகளைச் சேகரித்து வைக்கும் பொழுதும், அவற்றை வினியோகம் செய்யும் பொழுதும் பயன்படுத்தப்பட வேண்டிய முறைமைகள் எவை? (02 புள்ளிகள்)

(iii) சரீன் என்பவர் ஆடைகளை ஏற்றுமதி செய்யும் வணிகமொன்றின் உரிமையாளராவார். இங்கு சரீனினால் பின்பற்றப்பட வேண்டிய ஏற்றுமதி விதிமுறைகளைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள். (04 புள்ளிகள்)

(iv) (அ) நிகழ்காலச் சந்தையினுள் சிறப்புச் சந்தை முறைமையானது அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காணக்கூடியதாக இருப்பினும், நகர, கிராமப் பகுதிகளில் காணப்படும். வாராந்தச் சந்தைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இவ்வாராந்தச் சந்தைகளிலிருந்து நுகர்வோர் அடைந்து கொள்ளும் அனுகூலமான நிலைமைகள் எவை? (02 புள்ளிகள்)

(ஆ) இந்நாட்டுத் தொழில் முகவர் நிலையமொன்றுக்கும் வெளிநாட்டுத் தொழில் வழங்கும் நிறுவனமொன்றுக்கும் இடையே தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வாதற்காகப் பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் முறைமைகளை பெயரிட்டுக் காட்டுங்கள். (02 புள்ளிகள்)

(v) (அ) **1.** பந்தித்த (கட்டுண்ட) பண்டகசாலை என்றால் என்ன? (01 புள்ளி)

**2.** பந்தித்த (கட்டுண்ட) பண்டகசாலையொன்றின் மூலம் இறக்குமதியாளனுக்குக் கிடைக்கும் பயன்கள் எவை? (01 புள்ளி)

(ஆ) வெளிநாட்டு வியாபாரத்தில் பயனப்டுத்தப்படும் கொடுப்பனவு முறைகள் **நான்கினைக்** குறிப்பிட்டுக் காட்டுங்கள். (02 புள்ளிகள்)

**(மொத்தப் புள்ளிகள் 20)**

## பகுதி II

**5.** **(i)** (அ) "முகாமைத்துவம்" என்பது விஞ்ஞானமொன்று என்பதைப் போன்று ஒரு கலையுமாகும்" விளக்கவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) திட்டமிடலுக்கும் கட்டுப்பாட்டுக்குமிடையிலான தொடர்பைச் சுட்டிக் காட்டுங்கள் **(02 புள்ளிகள்)**

**(ii)** (அ) வரையறுக்கப்பட்ட ரன்சலு கம்பனியானது குழந்தைகளுக்கான ஆடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றாகும். குழுவிற்காக இலவசப் போக்குவரத்து வசதிகள் உட்பட அனேக நலனோம்புச் சேவைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனைகளில் விரைவான அதிகரிப்பொன்றேற்பட்டிருப்பதையும் காணக் கூடியதாக இருந்தது. மேலும் வீண்விரயமாதல், சேதமுறுதல் என்பன குறைவாக இருப்பதனால் உற்பத்திக் கிரயத்திலும் குறைவொன்று ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது, இந்நிலைமையினடிப்படையில் வணிகத்தின் இலாபத் தன்மையிலும், விற்பனை வருமானத்திலும் விரைவான வளர்ச்சியையும் கொண்டிருந்தது. இவ்விடய ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட ரன்சலு நிறுவனத்தின் வினைதிறனை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் நியதிகள் **நான்கினைக்** குறிப்பிட்டுக் காட்டுங்கள். **(02 புள்ளிகள்)**

[ பக் 4 ஐப் பார்க்க

(ஆ) நிகழ்காலத்தில் மாற்றமடையும் பல்வகைச் சூழலில் வணிக அமைப்புக்களின் முகாமைத்துவத்தின் தேவைப்பாடானது மிகவும் முக்கியத்துவமுடையதாக இருப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணங்களை குறிப்பிடுங்கள் **(02 புள்ளிகள்)**

**(iii)** "சிலோன் டெக்ஸ்" நெசவுத் தொழிற்சாலையானது மிக அண்மிய ஒரு வருட காலத்திலிருந்து நடத்திச் செல்லப்படுகின்றது. அந்நிறுவனத்தின் இயக்குனர் சபையானது நெசவு ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு எண்ணியுள்ளது.

(அ) இதற்காக நடமுறைப்படுத்தக் கூடிய ஊழியர் ஊக்குவிப்பு முறைகள் **நான்கினைக்** குறிப்பிடுங்கள் **(02 புள்ளிகள்)**

(ஆ) "குழுவொன்றின் அங்கத்தவர்களது தொழில்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவதற்கும் அச்சுறுத்தல்கள் செலுத்துவதற்குமான திறனானது தலைமைத்துவம் ஆகும்." ஏன் அமைப்பொன்றின்றிற்கு தலைவரொருவர் தேவை என்பதற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுங்கள். **(02 புள்ளிகள்)**

**(iv)** (அ) நிறுவனக் கட்டமைப்பு முறைமையொன்றின் அடிப்படைகள் எவை என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள் **(02 புள்ளிகள்)**

(ஆ) வணிக அமைப்பொன்றின் வெற்றிக்கு ஒழுங்கமைத்தல் முக்கயமாவதில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுங்கள் **(02 புள்ளிகள்)**

**(v)** (அ) வணிக நிறுவனமொன்றின் மொத்த நிலையான கிரயம் ரூபா. **60 000/-** ஆகும். அலகொன்றிற்கான விற்பனை விலை ரூபா. **60/-** ஆகும். மொத்த மாறும் கிரயம் ரூபா. **30 000/-** ஆகும். விற்பனைப் புறழ்வு ரூபா **60 000/-** ஆகும். இவ்வணிகத்தின் சமன்பாட்டுப் புள்ளிக்குரிய உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை யாது? **(02 புள்ளிகள்)**

(ஆ) சமன்பாட்டுப் புள்ளியைக் கணிப்பிடுவதினால் வணிக நிறுவனத்திற்குக் கிடைக்கும் பயன்கள் எவை? **(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

The National e-Learning Portal for The General Education

**6.** **(i)** (அ) சந்தைப்படுத்தலானது ஏன் மனித நேயம் கொண்டதும் சமூக ரீதியான செயற்பாடொன்றாகவும் கருதப்படுகின்றது. விளக்கவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) "சந்தைப்படுத்தல் வணிகர்களுக்கு மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்திற்கும் நுகர்வோனுக்கும் ஒன்று போல் முக்கியமானதாகும்."

**1.** சந்தைப்படுத்தலானது நாட்டின் பொருளாதாரத்திற்கு எவ்வாறு முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றது. **(01 புள்ளி)**

**2.** நுகர்வோனுக்கு சந்தைப்படுத்தல் எவ்வாறு முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றது. **(01 புள்ளி)**

**(ii)** (அ) வெற்றிகரமான சந்தைத் தூண்டமாக்கலுக்குப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் எவை? **(02 புள்ளிகள்)**

(ஆ) "சந்தைப்படுத்துமொருவர் சேவைகளை வழங்கும் பொழுது பொருட்களையே அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது." உதாரணம் மூலம் விளக்கவும். **(02 புள்ளிகள்)**

**(iii)** (அ) சந்தைப்படுத்தல் கலவை, பொருள் சந்தைப்படுத்தல் கலவை, சேவை சந்பைப்படுத்தல் கலவை என்றவாறு வகைப்படுத்த முடியும். பொருள், சேவை சந்தைப்படுத்தல் கலவைகளின் துணை மாறிகளை வெவ்வேறாகக் காட்டுங்கள். **(02 புள்ளிகள்)**

(ஆ) உற்பத்திப் பொருள் மட்டங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்கவும் **(02 புள்ளிகள்)**

**(iv)** நடைமுறையில் சந்தைக்கு முன்வைக்கப்படும் அனைத்துப் பொருட்களும் குறியீடொன்றுடன் கூடியதாகவே முன்வைக்கப்படும்.

(அ) குறியீடொன்றில் காணப்பட வேண்டிய **நான்கு** பண்புகளைக் குறிப்பிடவும் **(01 புள்ளி)**

(ஆ) குறியீட்டு வகைகள் **இரண்டினை** உதாரணங்களுடன் காட்டுங்கள் **(01 புள்ளி)**

(இ) உற்பத்திப் பொருளொன்றிற்கு விலையைக் குறிக்கும் பொழுது கிரயம், கேள்வி, போட்டி எனும் காரணிகளுக்கு மேலதிகமாக நோக்கப்படும் ஏனைய **இரு** காரணிகளை குறிப்பிட்டுக் காட்டுங்கள். **(01 புள்ளி)**

(ஈ) அலகொன்றிற்கான நிலையான கிரயம் ரூ. **4/-** ஆகவும் மொத்த மாறும் கிரயம் ரூபா. **20 000/-** ஆகவும் உத்தேச உற்பத்தி அலகுகள் **1000** மாகவும் இருக்க உற்பத்தியாளர் விற்பனை விலையில் **20%** இலாபம் எதிர்பார்க்கப்படுகின்றது எனக் கொண்டு,

1. அலகொன்றிற்கான விற்பனை விலையைக் கணிக்க. **(1/2 புள்ளி)**
2. விற்பனைப் புறழ்வு எந்தளவில் உள்ளது? **(1/2 புள்ளி)**

**(v)** (அ) வரையறுக்கப்பட்ட ஜெஸ்மின் (தனி) கம்பனிக்கு கணினி வேலைத்திட்டங்களை உருவாக்கும் பதவிக்கான வேளை விண்ணப்பப் படிவமொன்று தயாரித்துக் கொடுக்குமாறு உங்களிடம் கேட்கப்படுகின்றது. இதற்கமைய வேளை விண்ணப்பப் படிவமொன்றைத் தயாரிக்கவும். **(03 புள்ளிகள்)**

(ஆ) வேளை விண்ணப்படிவங்களை வெளியிடும் ஊடகங்களுக்கான உதாரணங்களைத் தருக. **(01 புள்ளி)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**7.** **(i)** "சுமந்திரன் உற்பத்தியாளர்" பாலுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு விநியோகிக்கும் வணிக நிறுவனமொன்றாகும். "பசுமையான உற்பத்திப் பொருட்களை" நுகர்வோனுக்கு விற்பனை செய்வதே பாலுணவு உற்பத்தி நிறுவனமொன்றின் நோக்கமாக இருக்கின்றது.

(அ) சுமந்திரன் நிறுவனம் மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணங்கள் எவை? **(02 புள்ளிகள்)**

(ஆ) தரத்துடன் கூடிய மூலப்பொருட்களை கொள்வனவு செய்யாமல் இருப்பதனால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்களை விளக்கவும். **(02 புள்ளிகள்)**

**(ii)** (அ) "தொழில்சார் தகைமைகளைப் பெற்ற புகைப்படநுட்பவியலாளரான நரேனுக்குக் கிடைக்கின்ற அழைப்பினடிப்படையில் பல்வேறுபட்ட களியாட்ட நிகழ்ச்சிகளின் போது புகைப்படக் கலையில் ஈடுபடுமொருவராவார்."

1. புகைபட நுட்பவியலாளரான நரேனினால் நடைமுறைப்படுத்தப்படும் உற்பத்தி முறைகளைக் குறிப்பிட்டுக் காட்டவும். **(01 புள்ளி)**
2. ஏனைய உற்பத்தி முறைகளிலிருந்து இவ்வுற்பத்தி முறை வேறுபட்டிருப்பதற்கு அடிப்படையாகக் கொள்ப்பட்ட நியதிகள் எவை? **(01 புள்ளி)**

(ஆ)
1. உற்பத்தித் தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் எவை? **(01 புள்ளி)**
2. தரப் பாதுகாப்பு என்பதன் மூலம் யாது கருதப்படுகின்றது. **(01 புள்ளி)**

**(iii)** (அ) உற்பத்தி நிறுவனத்தின் பொருளாதாரக் கட்டளைக் கணியத்தைத் தீர்மானிக்கும் பொழுது மொத்தக் கிரயம், கட்டளையிடல் கிரயம், இருப்புப் பேணல் கிரயம் என்பன எவ்வாறான தன்மையினைப் பெறுகின்றது என்பதை வரைபொன்றின் மூலம் காட்டுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) நிலைய (தள) அமைவுத் திட்டமொன்றை உருவாக்கும் போது கருத்திற்கொள்ளப்படும் விடயங்கள் எவை? **(02 புள்ளிகள்)**

**(iv)** (அ) பயிற்சி, அபிவிருத்தி என்பவற்றினூடாக வேளை வழங்குநருக்கும் தொழில் பெறுநருக்கும் கிடைக்கும் அனுகூலங்கள் **இவ்விரண்டு** வீதம் குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) சிறந்த தொழில் உறவு முறையினைப் பேணுவதால் கிடைக்கும் பயன்கள் எவை என்பதை விளக்கவும் **(02 புள்ளிகள்)**

**(v)** (அ) மனிதவள முகாமையாளரின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் குத்தான, கிடையான முறைகளில் செயல்முறைப்படுத்தப்படுகின்றன. இந்நிலைமைகளானது ஏனைய முகாமையாளர்களின் அதிகாரங்கள் பொறுப்புக்களில் இருந்து வேறுபட்டதாகும். விளக்குக. **(02 புள்ளிகள்)**

(ஆ) தொழில் (வேளை) உருவாக்கமும் தொழிற்பகுப்பாய்வும் என்பதன் மூலம் கருதப்படுவது யாது? **(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

[ பக் 6 ஐப் பார்க்க

**8.** **(i)** (அ) "கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிறுவகத்தின் மூலம் கம்பனிகளுக்குப் புதிய மூலதனங்களைத் திரட்டுவது இல்லை." நீங்கள் இக்கூற்றுக்கு உடன்படுகின்றீரா? என்பதனைக் குறிப்பிட்டு அதற்கான காரணங்களைக் குறிப்பிடுங்கள். **(02 புள்ளிகள்)**

(ஆ) முதலீட்டுக் கலவை என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்கவும். **(02 புள்ளிகள்)**

**(ii)** (அ) வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றில் உயர் இணைப்பு மூலதனக் கட்டமைப்பும் உயர் இலாபத் தன்மையும் காணப்படும் பொழுது மிகவும் பொருத்தமான முறையாக இருப்பது தொகுதிக் கடன் பத்திரங்களை விநியோகிப்பதா? அல்லது பங்குகளை விநியோகிப்பதா? என்பதனை விளக்கவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) பற்றாக்குறையான மூலதன நிலைமையொன்றைக் குறைத்துக் கொள்வதற்கு வணிகமொன்று கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் எவை? **(02 புள்ளிகள்)**

**(iii)**(அ) கொழும்புப் பங்குப்பரிமாற்றகத்தின் கொடுக்கல் வாங்கல்களான பிணை வகைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுங்கள். **(02 புள்ளிகள்)**

(ஆ) மிலங்கா விலைச்சுட்டெண்களுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட S&P இலங்கை 20 சுட்டெண்ணைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்திய சர்வதேச நியமங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

**(iv)** இலங்கையில் பல்வேறு வணிக நிறுவனங்களினால் தனது நிறுவனச் சூழலில் **Wi-Fi** வசதிகளை இலவசமாகப் பெற்றுக்கொடுக்கும் போக்கினைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வசதிகளை விரிவுபடுத்துவதினூடாக ஒவ்வவொரு வணிக நிறுவனங்களுக்கும் மட்டுமன்றி வாடிக்கையாளர்களுக்கும் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டுக் காட்டுக. **(04 புள்ளிகள்)**

**(v)** (அ) காசுப்பாய்ச்சல் கூற்றை அறிமுகப்படுத்தி அதன் காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல்களுக்கான உதாரணங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிட்டுக் காட்டவும். **(03 புள்ளிகள்)**

(ஆ) "வணிகத்திட்டமொன்றற்ற வணிகம் துடுப்புடைந்த ஓடத்தைப் போன்றது." விளக்கவும். **(01 புள்ளி)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

The National e-learning Portal for the General Education

***